**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

நாள் 27.01.2026

அசல் வழக்கு எண். 298/2011

வா.சா. 1 – சுந்தரமூர்த்தி, த/பெ. தானப்பா நாயக்கர்

சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**<u>குறுக்கு விசாரணை</u>**

சங்கர் உங்கள் சகோதரர் என்றால் சரிதான். அவர் இதே வழக்கு சொத்து குறித்து முதன்மை சார்பு நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான் அந்த அசல் வழக்கு எண் 297/2011 என்றால் சரிதான். அந்த வழக்கிலும் மேற்படி நான்கு பிரதிவாதிகளும் தரப்பினர் என்றால் சரிதான். அந்த வழக்கில் அவர்தான் உரிமையாளர் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார் இந்த வழக்கில் நீங்கள் தான் உரிமையாளர் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் இரண்டு வழக்கு போட வேண்டிய அவசியம் என்னவென்றால் நான் ஒரு வழக்கு தான் கொடுத்தேன் வழக்கறிஞர் இரண்டு வழக்காக நீதிமன்றத்தில் தாக்கல் செய்து விட்டார். உங்களுடைய தாத்தா பெயர் என்ன என்றால் ஆறுமுக நாயக்கர் ஆவார். ஆறுமுக நாயக்கருக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் மூன்று பிள்ளைகள் என்றால் சரிதான். 1.துலுக்காணம், 2.தானப்பன், 3.செல்ல குட்டி என்றால் சரிதான். மேற்படி தானப்பன் உங்களுடைய அப்பா என்றால் சரிதான். உங்கள் தாத்தா ஆறுமுக நாயக்கர் கூட்டுக் குடும்ப சொத்துக்களை ஆதியில் நிர்வாகித்து வந்தார் என்றால் சரி இல்லை அவருடைய ஊர் கொழப்பலூர் ஆகும். வழக்கு சொத்து அனுமந்ததண்டலம் ஊரில் இருக்கிறது அதனை அவர் ஆண்டு அனுபவித்து வரவில்லை. அனுமன் தண்டலத்தில் உங்களுக்கு சொந்தமான எவ்வளவு நிலம் இருந்தது என்றால் 1 ஏக்கர் 80 சென்ட் நிலம்

இருந்தது. அது கிராம நத்த சொத்து என்றால் சரிதான். உங்கள் குடும்பத்திற்கு வீட்டு மனைகள் எவ்வளவு என்றால் 40 சென்ட் ஆகும். உங்கள் தாத்தா ஆறுமுகம் எப்பொழுது இறந்து விட்டார் என்றால் ஞாபகம் இல்லை. சுமார் 70 ஆண்டுகள் இருக்குமா என்றால் இருக்கும். ஆறுமுகம் நாயக்கர் இறந்த பிறகு அவரது பிள்ளைகள் துலுக்காணம், தானப்பன், செல்லக்குட்டி ஆகியோர் மூவரும் பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்றால் சரியில்லை கூட்டு குடும்ப சொத்தை பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்றால் சரியில்லை.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- T.Thirumal,
Additional Subordinate Judge,
Kancheepuram.